எங்க தேசத்திலே இடி விழுந்தது ஏன் அம்மா
அது மறுபடியும் உயர்ந்து நிற்கும் பார் அய்யா
இது கால தேவன் தந்து விட்ட சாபமா
நல்ல காலம் வரும் பொறுத்திருக்க வேனுமே
ஓய்ந்திடாதோ போராட்டம் வாழலாமா இனியேனும்
கூடவேணும் எல்லோரும் பாட வேணும் புதுராகம்

எங்க தேசத்திலே இடி விழுந்தது ஏன் அம்மா
அது மறுபடியும் உயர்ந்து நிற்கும் பார் அய்யா

மறப்பேனோ மனதினில் நாளும் நினைவுகளை
கலங்காதே காலம் நேரம் கூடி வரும் 2
ஊராயுதம் கேள்விகளை யாரோடு அதை கேட்டிடுமே
நீதி வரும் காத்திருப்போம் ஞாயங்கள் தோர்ப்பதுண்டோ
ஒரு மரத்து பறைவைகளே ஒன்றாக வா வா வா

எங்க தேசத்திலே இடி விழுந்தது ஏன் அம்மா
அது மறுபடியும் உயர்ந்து நிற்கும் பார் அய்யா

கலங்காதே நடந்ததை எண்ணி தனிமையிலே
எதிர் காலம் பொன்னாகமாறும் கவலையில்ல 2
சொந்தம் என யாருமில்ல சோகம் சொல்ல ஆளும்இல்ல
ஊரே கூடி தேரிழுப்போம் ஒன்றாய் கூட நாள் குறிப்போம்
ஒற்றுமையே பலமாகும் ஓடி  வா வா வா

நம்ம தேசத்தையே நாமும் காண போகலாம்
அது மறுபடியும் உயர்ந்து நிற்க காணலாம்
நேர்மை வெல்லும் நாளையே காத்திருப்போம் வாழ்விலே
நம்ம தேசத்தையே நாமும் காண போகலாம்
அது மறுபடியும் உயர்ந்து நிற்க காணலாம்